## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**REA** 11/2017 **in EP** 26/2012

பெயர்: மணிவாசகம் நாள்: 23.09.2023

ம.சா.2 – 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை

ம.சா.2 – மணிவாசகம் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.59</u>

மனு சொத்திற்கான சர்வே எண் 252/4 ஆகும். அதற்கான செக்குபந்தி கிழக்கும் தெற்கும் பச்சமுத்துவின் நிலம் உள்ளது. மேற்கே ஒரு நிலம் உள்ளது, அது யாருடையது என்று எனக்கு தெரியாது. வடக்கு ரோடு உள்ளது. பச்சமுத்து என்பவர் 2 ம் மனுதாரர் ஆவார். நானும் பச்சமுத்துவும் சேர்ந்து நிலத்தை வாங்கி விற்கும் தொழில் செய்தோம் என்றால், சரிதான். தற்போது அந்த தொழிலை நான் செய்வதில்லை. பச்சமுத்து கேட்டுக்கொண்டதால்தான் மனு சொத்தை நான் கிரையம் பெற்றேன். எனக்காக 2, 3 மனுதாரர்கள் மனுவை நடத்தி வருகிறார்கள் என்றால், சரிதான். நான் எவ்வளவு தொகை கொடுத்து சொத்தை கிரையம் பெற்றேன் என்று எனக்கு தெரியாது. நான் மனு சொத்தை 2 ம் மனுதாரருக்கு விற்கும்பொழுது எவ்வளவு தொகைக்கு விற்றேன் என்பது எனக்கு தெரியாது. மனு சொத்தை கிரையம் பெற்ற பிறகு பட்டாவை எனது பெயருக்கு மாற்றிக்கொண்டேன். எனது பெயரில் வருவாய் ஆவணங்களை மாற்றமடையவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

2) நான் மனு சொத்தை கிரையம் பெறும்பொழுதே மனு சொத்து குறித்து 4 ம் எதிர்மனுதாரர் பாலசுப்ரமணியம் பெயரில் ஒரு ஒப்பந்த பத்திரம் நிலுவையில் இருந்தது என்று சொன்னால், சரியல்ல. 4 ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள கிரைய ஒப்பந்த பத்திரத்தை தெரிந்து கொண்டுதான் நான் கிரையம் பெற்றேன் என்றால், சரியல்ல. நான் மனு சொத்தை கிரையம் பெற்று 2 ஆண்டுகளுக்கு பிறகுதான் பச்சமுத்துவுக்கு விற்பனை செய்தேன். நான் அசல் வழக்கு எண் 217/2008 வழக்கின் தீர்ப்பாணையை மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விபரத்தினை தெரிந்து கொண்டுதான் விற்பனை செய்தேன் என்று சொன்னால்,

சரியல்ல. தீர்ப்பாணை பதிவு செய்யப்பட்ட விபரம் தெரிந்துகொண்டுதான் மனு சொத்தை விற்பனை செய்தேன் என்றாலும், அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. 4ம் எதிர்மனுதாரர் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை.

3) 4ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் விபரங்கள் தெரியும் என்றாலும், அதனை ஒப்புக் கொண்டால் மனுவிற்கு பாதகமாக சென்றுவிடும் என்பதால், விபரங்கள் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 1 முதல் 3 எதிர்மனுதாரர்களை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் கிரையம் பெற்றுள்ளதால்தான் அசல் ஆவணங்களை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. மனு சொத்தின் உரிமை இல்லாமல் பச்சமுத்துவிற்கு உரிமை மாற்றம் செய்துள்ளது செல்லாது என்று சொன்னால், சரியல்ல. அதேபோல் 2ம் மனுதாரர் 3ம் மனுதாரர் பெயரில் ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று சொன்னால், சரியல்ல. அசல் வழக்கு எண் 217/2008 வழக்கு குறித்த அனைத்து விபரங்களையும் தெரிந்து கொண்டு, தற்போது இந்த மனுவை தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால், சரியல்ல. அதனால் இடைநிலை நிறைவேற்று மனு 11/2017 தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.14</u>

ஒப்பம் /மணிவாசகம்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.